**தலைப்பு 130 – அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 130 – அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 31 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,520.77 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,469.71 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 51.06 மில்லியன் அதாவது 3.36 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,041.58 | 1,027.95 | 13.63 | 1.31 |
| மூலதனம் | 479.19 | 441.76 | 37.43 | 7.81 |
| மொத்தம் | **1,520.77** | **1,469.71** | **51.06** | **3.36** |

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக 20.02.01.01 வருமானக் குறியீட்டிற்காக ரூபா 750.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 789.53 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 105.27 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.02.01.01 | 750.00 | 789.53 | 39.53 | 5.27 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 13001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 85.00 | 54.82 | 24.00 | 25.28 | 133.00 | 105.07 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழான 05 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17.557 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0056/000 | 0.210 |
| 6000/0000/00/0013/0045/000 | 5.860 |
| 6000/0000/00/0016/0025/000 | 11.130 |
| 6000/0000/00/0018/0033/000 | 0.004 |
| 6000/0000/00/0002/0074/000 | 0.353 |
| மொத்தம் | **17.557** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.1.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 19,853,600 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 12,477,921 தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 7,375,679 சேமிக்கப்பட்டிருந்தது. அது தேறிய நிதியேற்பாட்டில் 16 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (2) ஆம் பந்தியின் பிரகாரம் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டிருந்த செலவின எல்லையில் செலவினம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 130-1-5-2401 செலவின விடயத்திற்காக ரூபா 45.7 மேலதிக நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலதிக நிதிஏற்பாடு ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் செய்யப்பட்ட நிதிஏற்பாட்டின் 304 சதவீதமாக இருந்தது.

## 3.2 வருமானக் கணக்குகள்

அமைச்சு செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.02.01.01 ஆம் இலக்க வருமான குறியீட்டிற்குரித்தாக வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீட்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 20.02.01.01 வருமானக் குறியீ டு – அரசின் கட்டிட வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டின் பிரகாரம், வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 750.00 மில்லியனான வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 789.53 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 105 சதவீதமாக இருந்தது.

(ii) வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 221,227,142 ஆன வருமானம் நிலுவையாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானம் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு இடையிலான வீச்சளவைக் கொண்டிருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டிற்காக நிலுவை வருமானம் ரூபா 1,214,529 மற்றும் 2014 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை வருமானம் ரூபா 4,408,111 என மீளாய்வாண்டின் போது நிலுவை வருமானமாக ரூபா 5,622,640 தொகை புதிதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் திறைசேரி அச்சிட்டுக் குறிப்புக்கள் மூலம் 10 வருமானத் தலைப்புக்களுக்குரிய கட்டிட வாடகை வருமானம் ரூபா 744,014 என இனங்கப்பட்டிருந்த போதிலும் அத்தலைப்புக்களின் நிலுவை வருமான அறிக்கை மற்றும் வருமான அறிக்கை என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக நிலுவை வருமானங்களில் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(iv) உணவுத் திணைக்களத்திடமிருந்து 2017 யூலை 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 46,527,303 ஆக இருந்தது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

விடய இலக்கம் 13001 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,107,460 ஆகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதியில் மரணித்த, வேலையை விட்டுச்சென்ற விடுவிப்பு அடிப்படையில் மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் முறையே ரூபா 33,691, ரூபா 600,339 தொகையும் ரூபா 1,150,837 தொகையாக இருந்ததுடன் அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை வெளிநாட்டு சேவை உத்தியோகத்தர்களுக்காக 2000 நவம்பர் 02 ஆந் திகதிய அமைப/00/1848/23/019 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட 20 வீடுகளின் நிர்மாண நடவடிக்கைகள் 2006 ஆம் ஆண்டின் போது முடிவடைந்திருந்தது. அந்நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரும் இலங்கை வெளிநாட்டு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சிற்கு சொந்தமன 07 வீடுகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அனுமதியன்றி சமய நிலையமொன்றாக நடாத்திச்செல்லப்படும் அமைச்சிற்குரிய பொரளை கொட்டா வீதியில் அமைந்துள்ள இரண்டு வீடுகளுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை வீதவரியாக ரூபா 32,208 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த இரு வீடுகளை அமைச்சின் பொறுப்பிற்கு எடுத்து அமைச்சின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 13 செலவின விடயங்களின் கீழ் ரூபா 327,908 தொகையான நிர்மாணிப்புகளுக்காக ரூபா 2,140,869 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 94(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் இடமளிக்கப்பட்டிருந்த வரையறையை விஞ்சி ரூபா 1,812,961 ஆன பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது.

(ii) 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் பூச்சிய அடிப்படை நுழைவு பின்பற்ற வேண்டுமென கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு

இணங்காத வகையில் 397 சந்தர்ப்பங்களில் 13 செலவின விடயங்களுக்காக ரூபா 4,172,961 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததன.

**3.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 மற்றும் 7.2 பிரிவு | 05 வீடுகளின் குடியிருப்போர் தொடர்பாக அப்பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| (i) நிதிப் பிரமாணம் 104(4) | 04 நட்டங்கள் சேதங்களுக்குரிய ரூபா 3,248,456 தொகை 3 மாதங்கள் முதல் 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்நட்டங்கள் தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 1642 | மீளாய்வாண்டின் போது 13 வாகனங்கள் 15 சந்தர்ப்பங்களில் விபத்துகளுக்கு உட்பட்டிருந்தன. அது தொடர்பாக போதியளவு பரிசோதனைகளை நடாத்துதல், தவறு செய்தவர்களை இனங்காணல் மற்றும் நட்டத்தை ஈடுசெய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) அரச நிதிச் சுற்றறிக்கை** | |
| 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | முற்பணம் உரிய செயற்பாடு நிறைவேற்றப்பட வேண்டிய தினத்திற்கு அண்மித்த திகதியில் வழங்கப்பட வேண்டிய போதிலும் தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு 05 நாட்கள் முதல் 22 நாட்கள் காலப்பகுதிக்கு முன்னர் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட 10 நாட்கள் கடப்பதற்கு முன்னர் முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் தீர்க்கப்பட வேண்டிய 17 நாட்கள் முதல் 80 நாட்கள் வரையான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |

(ஈ) 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு விதிக்கோவையின் 1 ஆம் பகுதியின் XVIII ஆம் அத்தியாயத்தின் 195 மற்றும் 103 இன் அத்தியாயங்களின் நிபந்தனைகள்

(i) கணக்காளர் சேவையின் வருடாந்த இடமாற்றம் செயற்படுத்தப்படாமல் இருந்ததுடன், ஒரே சேவை நிலையத்தில் 05 ஆண்டுகள் முதல் 16 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் வரை 670 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ii) மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் அரச முகாமைத்துவ சேவையினதும் ஏனைய 05 சேவைகளினதும் வருடாந்த இடமாற்றம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டும் இடமாற்ற விண்ணப்பங்கள் சமர்ப்பித்த எண்ணிக்கையின் 50 சதவீதத்திற்கு குறைந்த விண்ணப்பதார்களுக்கு மாத்திரம் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தன.

### 3.6 வெளிநாட்டுச் செயற்திட்டம்

2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை கஷ்ட பிரதேசங்களில் பிரதேச பொருளாதார அபிவிருத்திக்காக தேவையான இயலளவு அபிவிருத்திக்காக வெளிநாட்டு நிதியளித்தல் செயற்திட்டத்துக்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை UNDP செயற்திட்டத்தின் மூலம் கிடைத்த மானியங்களின் பெறுமதி ரூபா 727,729 அமெரிக்க டொலர்களாக இருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 4,000,000 ஆக இருந்தது. அச்செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,983,696 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இவ்வெளிநாட்டு உதவி செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்டம் தொடர்பாக செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் மூன்றாண்டு செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் செயலாற்றலை அளவிட முடியாமல் இருந்தது.

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 625 (i) (ஆ) பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்திற்குச் சொந்தமான ரூபா 11,401,370 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை செயற்படுத்தல்

2006 ஆண்டின் போது 1452 வீடுகளுடன் கூடிய வீட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நகர அபிவிருத்தி அதிகார சபை, மத்திய பொறியியல்சார் அலுவல்கள் தொடர்பான மதியுரை பணியகம் மற்றும் கட்டிடத் திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கு ரூபா 5,019,262 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 ஏப்ரல் மாதம் வரையிலும் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செயற்படுத்தப்பட்டிருந்த செயற்பாடுகளின் நிதி மற்றும் பௌதீக செயன் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தயாரிக்கப்பட்டிருந்த செயன்முன்னேற்ற அறிக்கையை பரீட்சித்த போது கீழே காட்டப்பட்டுள்ள விலகல் அவதானிக்கப்பட்டது.

(i) குழுக்களை கட்டியெழுப்புதல் மற்றும் தலைமைத்துவ பயிற்சிகளுக்காக வெளிக்கள பயிற்சிகளை நடாத்துவதற்காக ரூபா 1 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 0.124 மில்லியன் செலவிடப்பட்டு 34 உத்தியோகத்தர்களுக்காக செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருந்தது. அதன் நிதிச் செயன்முன்னேற்றம் 68 சதவீதமாக இருந்தது.

(ii) தொழிற்பயிற்சி மற்றும் 200 உத்தியோகத்தர்களுக்காக செயலாற்றல் முகாமைத்துவ முறைமையொன்றையும் குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கயையும் செயற்படுத்துவதற்காக ரூபா 1 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நாடளாவிய ரீதியான சேவைகள் 06 உட்பட 13 சேவைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 102,596 ஆக இருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், அதில் 11,454 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. அதன் பிரகாரம் வருடாந்த வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) பெறுகை வழிகாட்டல்களிலிருந்து விலகி செயற்படல்**

தேசிய உற்பத்தி திறன் விருது வழங்கல் விழாவை நடாத்துவதற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 15 மில்லியனுக்கு மேலதிகமாக, மேலதிக நிதி ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 45.7 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டு ரூபா 60.22 மில்லியன் செலவு செய்தமை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 செப்தெம்பர் மாதத்தின் போது மண்டப வசதிகளுக்காக கூறு விலை பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் மாதத்தின் போது நிகழ்ச்சி முகாமையாளர் தெரிவு செய்வதற்கான பத்திரிகை அறிவித்தலில் விருது வழங்கல் விழாவை நடாத்துவதற்காக இரத்மலான ஸ்டசின் ஸ்ரூடியோ மண்டபம் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்ட

காரணத்தினால் மண்டப வசதிகளுக்காக கூறுவிலை கோருவதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட இடம் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்குறித்த விடயம் தொடர்பாக 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1. வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு இருந்தது.

- போட்டி முகாமையாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தை விட கூடிய விலை சமர்ப்பித்திருந்த நிறுவனமொன்றுக்கு கேள்வியை வழங்கிய காரணத்தினால் ரூபா 1,611,600 கூடுதலாக கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்திருந்ததுடன் தெரிவு செய்வதற்கு விஷேட காரணங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

- உற்பத்தி திறன் நடுவர் வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்காக 60 சந்தர்ப்பங்களில் தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 5,219,048 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், செலவினத்தைக் குறைத்துக் கொள்ளும் மற்றும் நடைமுறையொன்றாக அமைச்சின் வாகனங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

செயலகத்தினால் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 15,000 தொகை அறவிட்டு உற்பத்தி திறன் தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது உற்பத்தி திறன் செயலகத்தின் அபிவிருத்தி உதவியாளர் பதவியில் சேவையில் ஈடுபட்டிருந்த 28 உத்தியோகத்தர்கள் இப்பாடநெறிகளை பின்பற்றியிருந்தனர். எனினும், அவர்களிடமிருந்து பணம் அறவிடப்படாதிருந்ததுடன், அதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.10 முகாமைத்துவ பலவீனங்கள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சிற்குரிய வீடுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 55.18 மில்லியனாக இருந்ததுடன் அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 36.04 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய நிலுவை வாடகை மீதி ரூபா 7.47 மில்லியனாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு கட்டிடத்திலிருந்து வெளியேறி இருந்த போதிலும், நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 59 பாராளுமன்ற உறுப்பினர்கள் / அமைச்சர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3.83 மில்லியனான வீட்டுவாடகை 2015 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டு வரை 14 உத்தியோகத்தர்களிடமிருந்து வீட்டு வாடகையாக அறவிடப்பட வேண்டிய ரூபா 7.18 மில்லியன் கூட்டுத்தொகை 2016 ஆம் ஆண்டு வரை

அறவிடப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 யூன் மாதத்தின் போது சனாதிபதி செயலகத்தினால் பெற்றுக்கொண்ட வீடு மற்றும் 2016 ஏப்ரல் மாதத்தின் போது சட்டமா அதிபருக்கு கையளிக்கப்பட்ட வீட்டிற்காகவும் 2017 யூன் மாதம் வரை வீட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 67 | 57 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 16 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 534 | 412 | 122 |
| (iv) | ஆரம்ப நிலை | 195 | 162 | 33 |
| | **மொத்தம்** | **813** | **647** | **166** |